CPA

Centre for Policy Alternatives

විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

# மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது காணாமற்போக்கப்பட்டோருக்கான அலுவலகத்தினை (OMP) செயல்முறைப்படுத்துவதற்கான செயன்முறை தொடர்பில் கவலையடைகின்றது

***13 செப்ரெம்பர் 2017:*** மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது (CPA), 2017 செப்ரெம்பர் 12 ஆம் திகதியன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கத்திற்கான அமைச்சர் என்ற தகைமையில் வர்த்தமானிப் பத்திரிகை (அதிவிசேடமானது) இல 2036/21 இனை வெளியிட்டமை தொடர்பில் தனது ஆழமான வருத்தத்தினை தெரிவிக்கின்றது. ஏலவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிருவகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டத்தினை (காணாமற்போக்கப்பட்டோருக்கான அலுவலகச் சட்டம்) தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கத்திற்கான அமைச்சரிற்கு ஒதுக்கீடு செய்கின்ற வர்த்தமானி (அதிவிசேட) இல 2028/45 இனை வெளியிட்ட சந்தர்ப்பத்திலே மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது இவ்விடயம் தொடர்பான தனது வருத்தத்தினை வெளியிட்டிருந்தது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் முன்னைய அறிக்கையிலே அரசியலமைப்புக்கான 19வது திருத்தத்தில் கூறப்பட்டுள்ளதற்கு அமைவாக அமைச்சுக்களுக்கு விடயப்பரப்பு மற்றும் பணிகளை ஒதுக்குவது பற்றிய முக்கியமான அரசியலமைப்பு விடயங்கள் தொடர்பான கருத்துக்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. அவ் அறிக்கையிலே சுட்டிக்காட்டியதனைப் போன்று 19 ஆவது திருத்தத்திற்கு முன்னர் ஜனாதிபதி வேறு எந்த அமைச்சரிற்கும் ஒதுக்கீடு செய்யப்படாத எவ் விடயப்பரப்பு அல்லது பணியினையும் தனக்கு ஒதுக்கீடு செய்துக் கொள்வதற்கு இயலும். இந்த ஏற்பாடானது 19 வது திருத்தத்தினால் நீக்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இடம்பெற்ற பொதுத் தேர்தலுக்கு பின்னர் ஜனாதிபதி அரசியலமைப்பின் உறுப்புரை 43 (2) இற்கு ஏற்ப பாராளுமன்ற உறுப்பினர்களை அமைச்சுக்களுக்குப் பொறுப்பானவர்களாக நியமிப்பதற்கான இரண்டு வர்த்தமானிகளை வெளியிட்டிருந்தார். அதன் பின்னர் அரசியலமைப்பின் உறுப்புரை 43 (1) இற்கு ஏற்ப ஜனாதிபதி ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட அமைச்சுக்களுக்கான விடயப்பரப்புக்கள் மற்றும் பணிகளினை ஒதுக்கீடு செய்கின்ற, 2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 21 என திகதியிடப்பட்ட வர்த்தமானி (அதிவிசேடமானது) இல 1933/13 இனை வெளியிட்டார். மேலும் இவ்வர்த்தமானியானது (1933/13-2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 21 என திகதியிடப்பட்டது) எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் ஒதுக்கீடு செய்யப்படாத "தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கத்திற்கான அமைச்சு" என்ற ஒரு அமைச்சை ஸ்தாபித்தது. எவ்வாறெனினும் 19 வது திருத்தத்தின் பிரிவு 51 இல் குறிப்பிடப்பட்டிருப்பவற்றிற்கு அப்பாலான விடயப்பரப்புக்கள் மற்றும் பணிகளை தமக்கு ஒதுக்கீடு செய்துக் கொள்வதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை. ஆகவே ஜனாதிபதிக்கு தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கத்திற்கான அமைச்சருக்குரிய அதிகாரங்களை வழங்குகின்ற 2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 21 என திகதியிடப்பட்ட வர்த்தமானி (அதிவிசேடமானது) இல 1933/13 இன் பாகங்கள் அரசியலமைப்பிற்கு முரணானவை. இதனைத் தொடர்ந்து ஜீலை மற்றும் செப்ரெம்பர் மாதங்களில் வெளியிடப்பட்டுள்ள இரண்டு வர்த்தமானிகள் தொடர்பாக கேள்விகள் எழுந்துள்ளன. குறிப்பாக செப்ரெம்பர் மாதம் வெளியிடப்பட்ட வர்த்தமானியானது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களினால் தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கத்திற்கான அமைச்சர் என்ற தகைமையில் வெளியிடப்பட்டதாகும். இதன் விளைவாக காணாமற்போக்கப்பட்டோருக்கான அலுவலகச் சட்டத்தின் பிரிவு 1(2) இல் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி காணாமற்போக்கப்பட்டோருக்கான அலுவலகத்தினை செயல்முறைப்படுத்துகின்ற செயலின் சட்டபூர்வத்தன்மை தற்போது கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் அரசியலமைப்புக் கட்டமைப்பு மற்றும் நல்லாட்சி, சட்டவாட்சி, ஜனநாயகம் மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றிற்கு வழிகோலுகின்ற விதத்தில் 2015 ஆம் ஆண்டு செய்யப்பட்ட உடன்பாடுகள் என்பனவற்றை முழுமையாக அவமதிக்கின்றதான இச்செயற்பாடு தொடர்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது ஏமாற்றமடைகின்றது. மேலும் இது சட்டவாக்கத்தினை உருவாக்குவதில் மற்றும் காணாமற்போக்கப்பட்டோருக்கான அலுவலகத்தை ஸ்தாபிப்பதில் மற்றும்

செயல்முறைப்படுத்துவதில் ஏற்பட்ட பல்வேறு தாமதங்கள் மற்றும் தடைகள் என்பனவற்றிற்கு காரணமாய் அமைந்த, ஆரம்பத்திலிருந்தே வினைத்திறனற்றதான அல்லது குறைபாடுடையதான செயன்முறையின் வருந்தத்தகு பிரதிபலிப்பொன்றாகும். உண்மைக்கான தேடுதலின் ஒரு முக்கிய படியான காணாமற்போக்கப்பட்டோருக்கான அலுவலகத்தினை ஸ்தாபிப்பதற்கான உடன்பாட்டினை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது வரவேற்றது. ஆனால் காணாமற்போக்கப்பட்டோருக்கான அலுவலகத்தினை ஸ்தாபிப்பதில் ஏற்படுகின்ற தொடர்ச்சியான தாமதங்களும் தவறுகளும் காணாமற்போக்கப்பட்ட தங்களுடைய அன்புக்குரியவர்களைத் தொடர்ச்சியாகத் தேடிக்கொண்டிருக்கின்ற ஆயிரக்கணக்கான மக்களிடையே காணப்படுகின்ற நிச்சயமற்றத்தன்மையினை மேலும் அதிகரிக்கும். இது உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது, இத் தவறுதலான மற்றும் எதேச்சாதிகாரமான நகர்வினை திருத்துவதற்கான மற்றும் இலங்கையின் அரசியலமைப்புக் கட்டமைப்பிற்கு மதிப்பளிக்கின்ற வகையில் காணாமற்போக்கப்பட்டோருக்கான அலுவலகத்தினை செயல்முறைப்படுத்துவதனை உறுதிப்படுத்துவதற்கான துரிதமான நடவடிக்கைகளை எடுக்கும்படி விடுத்த தனது முன்னைய அழைப்பினை மீண்டும் விடுக்கின்றது. இது தொடர்பான எந்தவொரு விதிவிலக்கும் காணாமற்போக்கப்பட்டோருக்கான அலுவலகத்தின் கௌரவத்தினையும், இலங்கையில் இடம்பெற்ற கடந்த கால துஷ்பிரயோகங்கள் மற்றும் தண்டனையிலிருந்து விடுபடுவதற்கான கலாசாரத்தினை தீர்ப்பதற்கான மிகவும் தேவைப்படுத்தப்படுகின்றதான பணிகளையும் கேள்விக்குட்படுத்தும்.